# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா. | 3 | நாள் : | 06.02.2025 |
| GWOP. No. | 246/2023 | | |
| பெயர் | ரமேஷ் | த/பெ | ஆதிமூலம் |
| வயது | 53 | தொழில் | டிரைவர் |
| ஜாதி | — | மதம் | இந்து |
| கிராமம் | மயிலக்கோயில் | தாலூக்கா | சீர்காழி |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை தான்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மயிலக்கோயிலில் குடியிருந்து வருகிறேன். எதிர்மனுதாரர் குண சேகரன் கூப்பிட்டதன் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். குணசேகரன் என் அண்ணன். வக்கீல் நோட்டீஸ் வந்ததால் தான் இலக்கியா இறந்து விட்டதாக சொல்லியுள்ளேன் என்றாலும் அந்த வக்கீல் நோட்டீசை படித்து பார்த்தேனா என்றால் இலக்கியா இறந்த பிறகு படித்து பார்த்தேன். அதில் இலக்கியாவின் கணவர் டைவர்ஸ் கேட்டிருந்தார். எனக்கு ஓரளவு ஆங்கிலம் படிக்கத்தெரியும். இலக்கியாவிற்கு அவரது கணவர் மூன்று முறை பணம் அனுப்பியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் சொல்லிதான் தெரியும். குணசேகரன் மனைவி குதிரைகுத்தி காமராஜர் நகரில் தலைமைஆசியராக பணிபுரிந்து வருகிறார். குணசேகரன் வீட்டிற்கும் அந்த இடத்திற்கு சுமார் 5 கிமீ தூரம் இருக்கும். இலக்கியா இறந்த பிறகு ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தில் குணசேகரன் வரதட்சணை கொடுமைக்காரணமாக இறந்ததாக

A. Ramesh

புகார் கொடுத்தார் என்றால் சரி. விசாரணைக்கு பிறகு அந்த முதல் தகவல் அறிக்கை close பண்ணப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் தன் குழந்தையை எதிர்மனுதாரர் குணசேகரன் மற்றும் அவர் மனைவி காண்பிக்க மறுப்பதாக ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலையம், மற்றும் நாகப்பட்டினம் SP யிடம் புகார் கொடுத்து அவர்களை விசாரித்தார்கள் என்றால் சரி. ஆனால் குழந்தையை பார்க்க அவர் வரவில்லை. பெண் குழந்தை பிறந்ததாக சொன்னபிறகு வரவில்லை என்று இலக்கியா என்னிடம் சொன்னார். பெண் குழந்தை பிறந்த நாளுக்கு என்னால் வர முடியவில்லை என்று சொல்லி 17.02.2021 அன்று பிறந்த நாள் செலவு 15 ஆயிரம் பணம் மனுதாரர் அனுப்பியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குணசேகரன் சொல்லிக்கொடுத்து பெண் குழந்தை என்பதால் மனுதாரர் குழந்தையை பார்க்க வரவில்லை என்று நீதிமன்றத்தில் sympathy create செய்வதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டு வருடமாக மனுதாரர் குழந்தையை பார்க்க வரவில்லை. எனக்கு நேரடியாக எதுவும தெரியாது என்றாலும் குணசேகரன் என் அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக அவர் சொல்லிக்ககொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

A. R. [signature]

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature] 6/2/25

மாவட்ட ...

மயிலாடுதுறை.

[signature] 6/2/25